**ஜூன் – 16**

**"எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதானப் பலனைத் தரும்." - எபி 12 : 11.**

இப்படிப்பட்ட ஒழுங்கிற்கடியில் தான் ஆத்துமா, எனக்குப் பெலன் கொடுக்கிற கிறிஸ்துவின் மூலமாக நான் எல்லாவற்றையும் செய்யக் கூடும், எல்லாவற்றையும் சகிக்கக் கூடும் என்று அமைதியாகச் சொல்லுகிற அன்புள்ள கீழ்ப்படிதலுக்குப் பக்குவமாக்கப்படுகிறது. படிப்படியாக பழைய சுபாவத்தின் களிம்பு அளிக்கப்படும் போது, பொன் அதிகதிகமாக வெளிப்படுத்தப்படும் பொழுது, இந்த விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள் தங்களுடைய அன்புள்ள கர்த்தருக்கு என்றென்றைக்கும் பிரியமானதாகின்றன. அவருக்கு அவர்கள் அவ்வளவு பிரியமானவர்களாய் இருக்கிறதினால், எல்லாத் துன்பத்திலும், உபத்திரவத்திலும் அவருடைய கிருபையினால் அவர்களைத் தாங்கவும், தன்னுடைய சமூகத்தினால் உற்சாகப்படுத்தவும் அவர் சமீபமாயிருக்கிறார். துக்கத்தின் மிகவும் ஆழமான நிழல் ஞாபகத்தின் மிகவும் பரிசுத்தமாக்கப்பட்ட இளைப்பாறுதலின் இடமாகிறது. அங்கே விடிவெள்ளி மிகுந்த பிரகாசமாகப் பிரகாசிக்கிறது. **- Z ’96, 44 (R 1943).**

சிட்சையானது தேவனுடைய ஒழுங்கு நடவடிக்கைகளைக் குறிக்கிறது. இவைகளுக்கு உட்படுகிறவர்கள் அப்போது சந்தோஷப்படுகிறதில்லை. ஆனால் பெரிதும் துக்கப்படுகிறார்கள் ஆனபோதிலும், இந்தச் சிட்சைகளினாலே தகுந்த விதமாகத் தங்களை ஒழுங்குபடுத்த அனுமதிக்கிறவர்கள் கிறிஸ்துவைப் போலொத்த குணத்தை அமைதியாக விருத்தியாக்குவதில் கனிகளைத் தருகிறவர்களாக்கப்படுகிறார்கள்..!

**-P ’32, 62.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

1கொரி 10:13; எபி 10:32-34; யோபு 5:17; நீதி 3:11,12; சங் 94:13; 119:75; யாக் 1:12; வெளி 3:19; அப் 14:22; 1பேது 5:9; யாக் 3:18

**கோபுர வாசிப்பு : Z ’,12 388 (R 5417)**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் எனக்கு நேர்ந்த நல்லொழுக்கப்படுத்தும் அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவைகளின் பலன்கள் எவை?